# இயல்பு கூட்டப்பொருட்கள்

1. இம்மாநகராட்சிக்குச் சொந்தமான `Compactor Lorry` (TN74AS 5587) 10,000 கிலோ மீட்டருக்கு அதிகமாக ஓடியுள்ளதால், வாகன தயாரிப்பாளரின் அறிவுரைப்படி இன்ஜின் ஆயில் மற்றும் கியர்பாக்ஸ் ஆயில் இவற்றை புதிதாக மாற்றுவதற்கும், இது தொடர்பான ஃ பில்டர் (FILTER) ஆகியன மாற்றி வாகனத்தின் இதர பாகங்களையும், முழுமையாக செக்கப் செய்யவும், மேற்படி பணியினை கம்பெனி அங்கீகரிக்கப்பட்ட டீலரான T.V.Sundram Iyengar & Sons Private Limited, Vishuvasapuram, Thovalai, Nagercoil நிறுவனத்தார் மூலம் பணிகளை மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.15,000/–ற்கும், பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற முன் அனுமதி எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியமைக்கும், அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.5176/2019/எச்3

**தீர்மானம் எண். 212– அங்கீகரிக்கப்பட்டது.**

2. திரு.T.வின்சென்ட் என்பவருக்கு நாகர்கோவில் டிரஸ்ட் மருத்துவமனையில் வைத்து 24.12.2012 அன்று ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது அந்த குழந்தையின் பெயர் V.J. VERGAL என்று மாநகராட்சி பிறப்பு மூல பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் குழந்தையின் பெயர் V.J. BERGAL என்று இருப்பதை V.J. BERJIN என்று தமிழ்நாடு அரசிதழில் வெளியிட்டு அதன்படி மாநகராட்சி பிறப்பு மூல பதிவேட்டில் பதிவு செய்ய தொடர்பாக மதுரை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP(MD)No.5581/2019 இவ்வழக்கு மாநகராட்சி சார்பாக எடுத்து நடத்த மதுரை உயர்நீதிமன்ற மாநகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூலபாண்டியன் அவர்களின் கடிதம் நாள். 15.03.2019 வழக்கு முன் செலவு தொகையாக ரூபாய் 7,500/– வழங்க கோரப்பட்டுள்ளது. அதனை வழங்கவும் மேற்கொண்டு வழக்கு தொடர்பாக ஏற்படும் அனைத்து செலவினங்களுக்கும் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.1838/2017/எச்3

**தீர்மானம் எண். 213– அங்கீகரிக்கப்பட்டது.**

3. நாகர்கோவில் பாராளுமன்ற உறுப்பினர் (இராஜ்ய சபா) உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19–ன் கீழ் நாகர்கோவில் மாநகராட்சி வெட்டூர்ணிமடம் பள்ளிவிளையில் பேருந்து பயணிகள் நிழற்குடை அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ2/2072/2017, நாள்.30.01.2019–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 21.02.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இராஜேந்திரன் | மதிப்பீட்டை விட 28.63% குறைவு |
| 2 | திரு. இராஜன் | மதிப்பீட்டை விட 24.59% குறைவு |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 28.63% குறைவாக கொடுத்துள்ள திரு.T.இராஜேந்திரன் என்பவர்க்கு கூடுதல் வைப்புத்தொகை ரூ.28,630/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.126/2018–2019

**தீர்மானம் எண். 214– அங்கீகரிக்கப்பட்டது.**

**4.** நாகர்கோவில் பாராளுமன்ற உறுப்பினர் (இராஜ்ய சபா) உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19–ன் கீழ் நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7–ல் சக்தி கார்டனில் திறந்தவெளி கலையரங்கம் அமைத்தல் பணிக்கு மாவட்ட ஆட்சி தலைவர் கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் செயல்முறை ஆணை எண்.ஆ2/2072/2018, நாள்.18.02.2019–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் கடந்த 06.03.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | திரு.T.இராஜேந்திரன் | மதிப்பீட்டை விட 12.00% குறைவு |
| 2 | திரு. T.வீரமணி | மதிப்பீட்டை விட 10.00% குறைவு |
| 3 | திரு. S.பீட்டர் | மதிப்பீட்டை விட 0.32% குறைவு |

குறைந்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 12.00% குறைவாக கொடுத்துள்ள திரு.T.இராஜேந்திரன் என்பவர்க்கு கூடுதல் வைப்புத்தொகை ரூ.12,000/– செலுத்திய பின்னர் வேலை உத்தரவு வழங்க அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.129/2018–2019

**தீர்மானம் எண். 215– அங்கீகரிக்கப்பட்டது.**

**5.** இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு எண்.48, சரலூர் பகுதியில் 5TPD கொள்ளளவு கொண்ட உரக்குடில் ரூ.60,00,000/– மதிப்பில் அமைக்க வேலை உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி இடத்தில் உரக்குடில் அமைக்க பொது மக்களிடமிருந்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதால் மேற்படி பணியினை வார்டு எண்.30, ராஜபாதையில் உள்ள மாநகராட்சி இடத்தில் அமைப்பதற்கு அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.519/2018–2019

**தீர்மானம் எண். 216– அங்கீகரிக்கப்பட்டது.**

**6.** இம்மாநகராட்சி வடலிவிளை வயல் தெருவில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதி 2016–2017 –ன் கீழ் ஆள்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் மற்றும் சிறு மின் விசை திட்டம் அமைக்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திருமதி.M.ஹெப்சிபாய் என்பவர் மதிப்பீட்டைவிட 23.83% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியதை ஏற்று 10.02.2018 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு வேலை ஆரம்பிக்கப்படவில்லை. இந்நிலையில் மேற்படி ஒப்பந்ததாரர் உரிமம்

ரத்து செய்யப்பட்டு இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.இ3/22185/2018, நாள். 01.11.2018–ன் படி சிறப்பு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவேமேற்படி பணியினை துறை மூலம் திரு.S.சுஜின், உதவி பொறியாளரால் செய்து முடிக்கப்பட்டது பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
மதிப்பீட்டு எண்.126/2017–2018
**தீர்மானம் எண். 217– அங்கீகரிக்கப்பட்டது.**

7. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74 AL1924–ற்கு சர்வீஸ் மற்றும் பில்டர்கள் மாற்றுவதற்கும் பழுது பணிகள் சரி செய்வதற்கும் உத்தேச செலவுத்தொகை ரூ.13,000/– ஆகும் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் சென்டர்ரான டெரிக் மகேந்திரா நிறுவனம் திருநெல்வேலி மூலம் பணி செய்வதற்கு வேலை உத்தரவு வழங்கலாம் அங்கீகாரத்திற்காக.
**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.1767/2012/இ2
**தீர்மானம் எண். 218– அங்கீகரிக்கப்பட்டது.**

8. இம்மாநகராட்சிக்கு சொந்தமான J.C.B. வாகனத்தில் ஆக்சில் ஆயில், பிரேக் ஆயில், மற்றும் பிரேக் தொடர்பான பணிகள் மேற்கொள்வதற்கும் சம்மந்தப்பட்ட பணிகளை கம்பெனி அங்கீகரிக்கப்பட்ட டீலரான "JAYARAJ AUTOMOBILE AGENCY" NAGARKOVIL நிறுவனத்திற்கு அவசர அவசியத்தின் பேரில் மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்தரவு வழங்கியமைக்கும், மேற்படி பணிக்கான உத்தேச செலவினம் ரூ.65,000/–ற்கும், சம்மந்தப்பட்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும், அங்கீகாரத்திற்கு.
**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.17975/2016/எச்2
**தீர்மானம் எண். 219– அங்கீகரிக்கப்பட்டது.**

9. இம்மாநகராட்சிக்கு சொந்தமான Garbage 4 Wheeler Tipper Auto (Mahindra Jeeto) வாகனங்கள் 25–ல் ஏற்கெனவே 6 வாகனங்களுக்கு புதிதாக டயர்கள் வாங்கி பொருத்தப்பட்டுள்ளன மீதமுள்ள 19 வாகனங்களின் டயர்களும் பழுதடைந்து விட்டதால் புதிதாக (19 x 4+1) 95 டயர் மற்றும் டியூப் புதிதாக வாங்குவதற்கும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி MRF நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட டீலரான ANLI TYRES, NAGERCOIL நிறுவனத்தார்க்கு பணி உத்தரவு வழங்கியமைக்கும், மேற்படி செலவினத்தை இம்மாநகராட்சி பொது நிதியில் (2400x95=2,28,000) மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்கு.
**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.15581/2018/எச்2
**தீர்மானம் எண். 220– அங்கீகரிக்கப்பட்டது.**

10. இம்மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் வாகனம் எண்.TN74D.2036–ற்கு மின்கலப்பெட்டி பழுதடைந்த நிலையிலுள்ளதால் புதிய மின்கலப்பெட்டி வாங்கி பொருத்துவதற்கான செலவினம் தொகை ரூ.8,000/–க்கு அனுமதி வேண்டி அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.10428/2017/இ2
**தீர்மானம் எண். 221– அங்கீகரிக்கப்பட்டது.**

**11.** தமிழ்நாடு திறந்த இடங்கள் (அழகை சீர்குலைத்தல்) சட்டம் 1959 –ன் படி இம்மாநகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் தனியார் சுவர்களில் விளம்பரம் செய்யவும், சுவரொட்டிகள் ஒட்டவும் தடை செய்யப்பட்டுள்ளதால் இம்மாநகராட்சிக்கு சொந்தமான சுவர்களில் விளம்பரம் செய்வதை ஏல அறிக்கையில் இருந்து நீக்கம் செய்திட அனுமதிக்கு.
**அலுவலக குறிப்பு**– அனுமதிக்கலாம்.
கோப்பு எண்.1266/2017/அ8
**தீர்மானம் எண். 222– அங்கீகரிக்கப்பட்டது.**

**12.** இம்மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.10–ல் தளவாய் தெருவில் அமைந்துள்ள ஹோட்டல் சரண்யா பிரைவேட் லிமிடெட், மீனாட்சிபுரம் என்பவருக்கு கீழ்கண்டுள்ள விபரப்படியாக 6 வரிவிதிப்புகள் உள்ளன அதன் விபரம்

| **வ.எண்** | **வரிவிதிப்பு எண்** | **வரிவிதிப்பாளர் பெயர்** | **நிலுவை வருடம்** | **மொத்த தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1 | 150/010/00577 | எஸ். நாகராஜன் | 1993–1994 முதல் 2018–2019 முடிய | 21,82,094/– |
| 2 | 150/010/00400 | எஸ். நாகராஜன் | 1993–1994 முதல் 2018–2019 முடிய | 50,256/– |
| 3 | 150/010/00399 | எஸ். நாகராஜன் | 1993–1994 முதல் 2018–2019 முடிய | 50,774/– |
| 4 | 150/010/00398 | எஸ். நாகராஜன் | 1993–1994 முதல் 2018–2019 முடிய | 49,080/– |
| 5 | 150/010/00397 | எஸ். நாகராஜன் | 1993–1994 முதல் 2018–2019 முடிய | 55,638/– |
| 6 | 150/010/00401 | எஸ். நாகராஜன் | 1993–1994 முதல் 2018–2019 முடிய | 48,702/– |
| | | | **மொத்தம்** | **24,36,544/–** |

மேற்படி அதிக நிலுவை தொகை வரப்பெற்றதால் நிலுவை செலுத்தக்கேட்டு இவ்வலுவலகம் மூலம் கேட்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அனுப்பப்பட்ட கேட்பு அறிவிப்பினை

ஆட்சேபித்து மாநகராட்சி ஆணையரை பிரதிவாதியாக்கி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) No.10906/2019, W.M.P.(MD) 8347/2019 தொடரப்பட்டுள்ளது.

எனவே மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பாக ஆஜராகி வழக்கினை நடத்திடவும், வழக்கிற்கு ஆகும் செலவினங்களுக்கும் வழக்கறிஞர் கட்டணத்திற்கும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு –** அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 4816/2019/அ2

**தீர்மானம் எண். 223– அங்கீகரிக்கப்பட்டது.**

**13.** இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump House IV –PH 401, PH 403 –ல் இரண்டு எண்ணம் 50 HP Submersible Pump –னை காயில் ரீவைண்டிங் செய்து பம்புகள் முழுமையான சர்வீஸ் செய்து பொருத்துவதற்கும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.93,500/–க்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு –**அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 5685/2019/இ3

**தீர்மானம் எண். 224– அங்கீகரிக்கப்பட்டது.**

**14.** இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump House III –ல் Spare ஆக இருந்த PH 304வடக்கு மற்றும் தெற்கு பக்கம் பழுதடைந்திருந்த 50 HP Submersible Pump –யின் காயில் ரீவைண்டிங் செய்து பம்புகள் முழுமையான சர்வீஸ் செய்து பொருத்துவதற்கும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.1,39,500/–க்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு –**அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 5684/2019/இ3

**தீர்மானம் எண். 225– அங்கீகரிக்கப்பட்டது.**

**15.** இம்மாநகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் Pump House III –ல் Bed Valve 5 (300 mm) Bed No.6 Air valve (125mm) மற்றும் Pump House I–ல் பழுதடைந்திருந்த PH 105 எண் கொண்ட மோட்டார் பம்பு (30HP Sub) முழுமையாக பழுது சரி செய்யவும் அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.52,000/–க்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு –**அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 5686/2019/இ3

**தீர்மானம் எண். 226– அங்கீகரிக்கப்பட்டது.**

**16.** இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 50–ல் A.R.கேம்ப் சாலையில் தார்தளம் அமைப்பதற்கு மதிப்பீடு எண்.8/18–19, நாள். 02.05.2018 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு.S.முத்து என்பவர் மதிப்பீட்டை விட 37.00% குறைவாக கொடுத்துள்ளார்.

எனவே மேற்படி பணியினை செய்திட D.D.No.388507, நாள்.**15.05.2018**–ன் படி ரூ.**1,65,000/–**ம் கூடுதல் வைப்புத்தொகையாக செலுத்தப்பட்டது. ஆனால் மேற்படி பணியின் அவசரம் கருதி ஒப்பந்தக்காரர் திரு.S.தியாகராஜன் என்பவரால் பேட்ச் ஒர்க் பணி செய்து முடிக்கப்பட்டது. எனவே மேற்படி பணியினை ரத்து செய்து ஒப்பந்தக்காரர் திரு.S.முத்து என்பவர் செலுத்தியுள்ள கூடுதல் வைப்புத்தொகை ரூ.**1,65,000/–**ஐ திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு –**அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். **8/18–19/**இ**1**

**தீர்மானம் எண். 227– அங்கீகரிக்கப்பட்டது.**

**17.** இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**3** மற்றும் **29–**ஐ உள்ளடக்கிய வெட்டூர்ணிமடம் சந்திப்பு கிறிஸ்து அரசர் ஆலயம் முன்பு உள்ள மழைநீர் வடிகால் ஓடையில் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**77,000/–**க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதிகள் எண்.**1920** பிரிவு **15–**ன் கீழ் ஒப்பந்தக்காரர் திரு.G.ராஜன் என்பவர் மூலம் மேற்படி பணியினை மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு –**அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். **5448/2019/**இ**1**

**தீர்மானம் எண். 228– அங்கீகரிக்கப்பட்டது.**

**18.** இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**42–**ல் SP Camp ஆபிஸ் சாலையில் அமைந்துள்ள பழைய பம்ப்ரூமை இடித்து விட்டு புதியதாக Sintex tank அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**60,000/–**க்கு அனுமதியும், பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்ட விதிகள் எண் **1920** பிரிவு **15–**ன் கீழ் மேற்படி பணியினை ஒப்பந்ததாரர் திரு.ரெதீஸ் என்பவர் மூலம் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு –**அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். **5513/2019/**இ**1**

**தீர்மானம் எண். 229– அங்கீகரிக்கப்பட்டது.**

**19.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான சர்.சி.பி. இராமசாமி ஐயர் நினைவு பூங்கா அருகில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட இரு / நான்கு சக்கர வாகன காப்பகத்தில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிப்பது சோதனை அடிப்படையில் நகராட்சி பணியாளர்கள் முன்னிலையாக உரிமதாரரை பயன்படுத்தி நிபந்தனைகளுக்குட்பட்டு **02.03.2019** முதல் **13.06.2019** வரை மின்னணு ரசீது மூலம் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருவாய் இழப்பின்றி இம்மாநகராட்சி கருவூலகத்தில் செலுத்தப்பட்டு உள்ளது.

மேற்படி சோதனை அடிப்படையில் கட்டணம் வசூல் செயலாக்க நடவடிக்கை தொடரப்பட்ட நிலையில் பொதுமக்கள், பாதசாரிகள் , போக்குவரத்து இடையூறு தொடர்ந்து ஏற்படும் நிலையில் சோதனை அடிப்படையிலான நடவடிக்கைகள் தொடர்ந்து செயல்படுத்த இயலாத நிலை

இருப்பதால் பார்வையில் கண்ட இந்நகர்மன்ற தீர்மானம் எண்.85, நாள். 28.02.2019–ல் அங்கீகரிக்கப்பட்ட மேற்காணும் ஏல நடவடிக்கையினை தொடர்ந்து வழங்கப்பட்ட உத்தரவினை 14.06.2019 முதல் ரத்து செய்திட மன்ற அங்கீகாரத்திற்கு. மேலும் , எதிர்வரும் காலத்தில் ஏல நடவடிக்கைக்குட்படுத்தாது ஏல அறிக்கையிலிருந்து நீக்கம் செய்திடவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 1266/2017/அ8

**தீர்மானம் எண். 230– அங்கீகரிக்கப்பட்டது.**

20. இம்மாநகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் உறிஞ்சு லாரி (TN74D0199) தகுதிச்சான்று புதுப்பிப்பதற்காக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்படி கால அளவிற்கு மட்டும் கழிவு நீர் உறிஞ்சு லாரி 1 எண்ணம் தனியார் மூலம் வாடகைக்கு அமர்த்தவும், அவசர அவசியத்தின் பேரில் மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் இதற்கான உத்தேச செலவினம் (2 மாத கால அளவிற்கு) ரூ.4.00 இலட்சத்திற்கும் பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 11931/2016/எச்2

**தீர்மானம் எண். 231– அங்கீகரிக்கப்பட்டது.**

21. இம்மாநகராட்சிக்கு எதிராக திரு.எம்.எம்.கிளிட்டஸ் என்பவர் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் மாநகராட்சி சார்பாக ஆஜராகி வாதாடிய வகைக்கு திரு.P.ஆதிமூலபாண்டியன், வழக்கறிஞருக்கு ரூ.7,500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) கட்டணமாக வழங்க அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 16619/2015/இ3

**தீர்மானம் எண். 232– அங்கீகரிக்கப்பட்டது.**

22. இம்மாநகராட்சியில் அம்ரூத் திட்டப்பணி ஒப்பந்தப்புள்ளி கொடுத்து குறித்த காலத்திற்குள் பணி செய்து முடிக்காத ஒப்பந்ததாரர் திருமதி.எம்.ஹெப்சிபாய் என்பவரது ஒப்பந்தம் ரத்து செய்து அன்னாரது பெயரினை கறுப்பு பட்டியலில் சேர்த்து உத்தரவிடப்பட்டதை ஆட்சேபனை செய்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.22832/2018 தொடர்ந்த வழக்கில் திரு.P.ஆதிமூலபாண்டியன், வழக்கறிஞர் ஆஜராகி வாதாடிய வகைக்கு கட்டணம் ரூ.7,500/– வழங்க அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 1357/2017/இ3

**தீர்மானம் எண். 233– அங்கீகரிக்கப்பட்டது.**

23. இம்மாநகராட்சிக்குட்பட்ட மிகவும் பழுதடைந்த சாலைகளான வடசேரி பேருந்து நிலைய அணுகுசாலை, டிஸ்லரி சாலை, தட்டான்விளை சாலை, இந்து கல்லூரி சாலை, W.C.C.சாலை

to கிறிஸ்து நகர், கணேசபுரம் சாலை, அசிசி சர்ச் முன்புறமுள்ள சாலைகள் மிகவும் பழுதடைந்து உள்ளதால் மேற்படி சாலைகளில் BT பேட்ச் ஒர்க் அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9,90,000/—க்கு அனுமதியும் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 5934/2019/இ1

**தீர்மானம் எண். 234– அங்கீகரிக்கப்பட்டது.**

24. நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட குஞ்சன்விளை புல எண்.189/1A (pt) இல் 8946.80 ச.மீ (2 .21 ஏக்கர்) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு மனுதாரா் பிரேமாவதி, விஜயராஜ் மற்றும் செந்தில்குமார் என்பவர்கள் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்க உறுப்பினர் செயலர் (பொ) நாகர்கோவில் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களுக்கு விண்ணப்பம் அளித்ததில் விண்ணப்பத்தினை ஏற்று உறுப்பினர் செயலர் அவர்கள் கடிதம் ந.க.எண்.1648/18 நா.உ.தி.கு , நாள்.30.05.2019 இன்படி Layout frame work ம.வ.(மு) / நா.உ.தி.கு எண்.16/2019 என எண்ணிடப்பட்டு நிபந்தனைகளுடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடிதத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சாலைகளுக்காகஒதுக்கப்பட்டுள்ள 1846.93 ச.மீ பரப்பளவு மற்றும் பொது ஒதுக்கீடு (OSR) 408.00 ச.மீ. பரப்பளவு மனையையும் மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து வழங்க மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட சாலைப்பரப்பளவு 1846.93 ச.மீ மற்றும் பொது ஒதுக்கீடு (OSR) 408.00 ச.மீ பரப்பளவு மனையையும் மாநகராட்சி ஆணையாளர் பெயருக்கு தானப்பத்திரம் மூலம் பதிவு செய்து வழங்க அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 5320/2019/எப்2

**தீர்மானம் எண். 235– அங்கீகரிக்கப்பட்டது.**

25. இம்மாநகராட்சிக்கு சொந்தமான குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 2019–2020–ம் ஆண்டிற்கு தேவையான ஆலம் ரூ.10,88,000/—க்கும், ஹைப்போகுளோரின் ரூ.24,20,000/—க்கும் வாங்கி பயன்படுத்துவதற்கு அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 5705/2019/இ3

**தீர்மானம் எண். 236– அங்கீகரிக்கப்பட்டது.**

26. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9–ல் உள்ள பிரதான சாலையான அவ்வைசண்முகம் சாலையின் ஒரு பகுதியான கட்டபொம்மன் சந்திப்பு முதல் தீயணைப்பு நிலையம் வரை சாலை மிகவும் பழுதடைந்து காணப்படுவதால் மேற்படி சாலையினை தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2017–18 சேமிப்புத்தொகையில் ரூ.11.00 லட்சம் மதிப்பீட்டில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.416, நாள்.04.09.2018–ன் படி ஒப்புதல் பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் செயல்முறை ஆணை எண்.21422/2017/இ3, நாள்.19.02.2019–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு காலதாமதமாகின்ற நிலையில், மேற்படி பணியினை மாநகராட்சி பொது நிதியில்

மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவம் கருத்தில் கொண்டு ரூ.24,80,000/–க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதற்கு அனுமதிக்கும், அனுமதிக்கப்பட்ட செலவினம் ரூ.11.00 இலட்சத்தை விட கூடுதலாகும் செலவினம் பொது நிதியில் ரூ.13,80,000/–க்கு அனுமதியும், மேற்படி திட்டத்தில் நிதி வரப்பெற்றவுடன் ரூ.11,00,000/–ம் மாநகராட்சி பொது நிதி கணக்கில் ஈடு செய்திடவும், மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 8155/2019/இ1

**தீர்மானம் எண். 237– அங்கீகரிக்கப்பட்டது.**

**27.** இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74AU6969–ற்கு 5,000 கி.மீ இயங்கியுள்ளதால் சர்வீஸ் செய்வதற்கும் கீழ்கண்ட பழுதுகள் பணிகள் சரிசெய்வதற்கும் உத்தேச செலவினம் தொகை ரூ.2500/– ஆகும்.

**வேலை விபரம்:–**

1. இஞ்சின் ஆயில்
2. ஆயில் பில்டர்
3. கம்பிறஷர் வாசர்
4. வின்ட் சீல்ட் வாசர்

மேற்படி அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் சென்ரான Derik Motors (p) Ltd திருநெல்வேலி மூலம் சர்வீஸ் மற்றும் பழுதுகள் சரிசெய்வதற்கு வேலை உத்தரவு வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 1767/2012/இ2

**தீர்மானம் எண். 238– அங்கீகரிக்கப்பட்டது.**

**28.** இம்மாநகராட்சி பொறியர் பிரிவு வாகனம் எண்.TN74AL 1852–ற்கு 1,00,000 கி.மீ வாகனம் இயங்கியுள்ளதால் ஆயில் சர்வீஸ் செய்வதற்கும் பழுது பணிகள் மேற்கொள்ளவும் அங்கீகாரம் பெற்ற சர்வீஸ் சென்டரான Derik Motors (p) Ltd திருநெல்வேலி மூலம் பணிமேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.50,000/– அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண். 973/2018/இ2

**தீர்மானம் எண். 239– அங்கீகரிக்கப்பட்டது.**

**29.** இம்மாநகராட்சி பகுதிக்குட்பட்ட 52 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் சுகாதார பணி மேற்கொள்ள அரசாணை எண்.101 (ந.நி.ம.கு.வ.துறை) நாள். 30.04.1997–ல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணி மேற்க்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

மேற்படி அரசாணையின்படி இம்மாநகராட்சிக்கு கீழ்கண்டுள்ளப்படி துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின்

செயல்முறை ஆணை எண்.K.Dis.No.28369/ஜே3/2018, நாள். 04.12.2018–ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | அரசாணை எண்.101–ன் படி அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 1111 நபர்கள் |
| 2 | தற்போதுள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்கள் | 265 நபர்கள் |
| 3 | ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்கள் விவரம் | 400 நபர்கள் |
| | **மொத்த பணியாளர்கள்** | **665 நபர்கள்** |
| 4 | ஒப்பந்த அடிப்படையில் கூடுதலாக பணியமர்த்தப்படவேண்டிய துப்புரவு பணியாளர்கள் விவரம் | 446 (1111 –665) |

இந்நிலையில் தற்போது பொறியியல் பிரிவில் நடைமுறையில் உள்ள CLC திட்டத்தின் கிழ் பணிபுரிந்து வரும் பணியாளர்களிடையே நிர்வாக பிரச்சனை எழுவதாலும், அவர்களின் பணி திருப்திகரமாக இல்லையென்பதாலும் நகராட்சி பொறியர் அவர்களின் 21.06.2019–ம் தேதிய அறிக்கையில் பொறியியல் பிரிவு பணியில், சுகாதாரப்பணி சார்ந்த பணி செய்திட கீழ்கண்டுள்ளபடி 50 (ஐம்பது) நபர்கள் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| **பணியாளர்களின் தேவை விவரம்** | | |
|---|---|---|
| 1 | முக்கூடல் மற்றும் மார்த்தால் சுகாதாரப்பணிக்கு | 15 நபர்கள் |
| 2 | குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுகாதார பணிக்காக | 15 நபர்கள் |
| 3 | 52 வார்டுகளில் உள்ள குடிநீர் தொட்டி சுத்தம் செய்தல், பார்க் பூங்கா சுகாதாரம் Bio – gas சுகாதாரம் செய்ய | 20 நபர்கள் |
| | **மொத்த பணியாளர்கள்** | **50 நபர்கள்** |

மேலும் துாய்மை இந்தியா திட்டத்தின் கீழ் புதிதாக வாங்கப்பட்டுள்ள 25 Garbage Tipper Auto மற்றும் 2.Compactor Lorry உட்பட 42 வாகனங்கள் இயங்கி வருவதால், மேற்படி வாகனங்கள் இயக்குவதற்கும் மற்றும் அவசர அவசியம் கருதி திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறப்பாக மேற்க்கொள்ளும் பொருட்டு வீடுகள் தோறும் 100% மட்கும் மற்றும் மட்காத குப்பைகளை பிரித்து குறிப்பிட்ட இடத்திற்கு கொண்டு செல்லவும் கீழ் கண்டுள்ளபடி பணியாளர்கள் தேவைப்படுவதாக மாநகர்நல அலுவலரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | வாகனம் ஓட்ட தெரிந்த துப்புரவு பணியாளர்கள் | 40 நபர்கள் |
| 2 | 52 வார்டுகளில் வீடுதோறும் 100% மட்கும் குப்பை மட்காத குப்பை பிரித்து வாங்கும் பொருட்டும் மற்றும் | 130 நபர்கள் |

| | | |
|---|---|---|
| | நிரந்தர பணியாளர் ஓய்வு பெற்றதினால் ஏற்பட்டுள்ள காலிபணியிடங்களுக்காக தேவைப்படும் கூடுதல் பணியாளர்கள் | |
| | **மொத்த பணியாளர்கள்** | **170 நபர்கள்** |

எனவே தற்பொழுது பணியாற்றி வரும் நிரந்தரம் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் போக கூடுதலாக 220 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுவதால் அவசர அவசியம் கருதி அரசாணை எண். **101–**ன் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோல்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.K.Dis.No.28369/ஜே3/2018, நாள். **04.12.2018–**ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளபடி ஒப்பந்த அடிப்படையில், ஏற்கனவே ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ள, ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டின் அடிப்படையில் M/s. Southern Solid Waste Management Service – Koottamavu நிறுவனம் மூலம் **01.07.2019** முதல் **30.09.2019** முடிய பணியமர்த்தவும் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>– 1.** அங்கீகரிக்கலாம்
**2.** அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஒப்புதல் பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் அங்கீகரிக்கலாம்.
**3.** உத்தேச செலவினம் ரூ.**1,10,00,000/–**ம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.2221/2016/எச்1
**தீர்மானம் எண்.240– அங்கீகரிக்கப்பட்டது.**

**30.** இம்மாநகராட்சி பகுதியில் **11** இடங்களில் தூய்மை இந்தியா திட்டம் **2018–2019–**ன் கீழ் உரக்குடில்கள் (Micro Compost Centers) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் செயல்முறை ஆணை எண்.**22866/P3/2018**, நாள். **23.08.2018–**ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் அடிப்படையில் வடசேரி பேருந்து நிலையம் அருகில் ரூ.**60.00** இலட்சம் மதிப்பில் உரக்குடில் அமைக்கும் பணிக்கு முதன்மை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை, அவர்களின் செயல்முறை ஆணை எண்.**18281/2018/**Do2, நாள்.**03.10.2018** படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி செய்ய அனுமதி வழங்கப்பட்டு பணி நடைபெற்று வரும் நிலையில் சம்பந்தப்பட்ட உதவி பொறியாளரின் மேற்படி **5TPD** கொள்ளளவு கொண்ட உரக்குடில் கட்டுமானத்தில் மதிப்பீட்டைவிட கூடுதலாக செய்யப்பட்ட பணிக்கு மன்ற ஒப்புதல் பெற்று உரிய உத்தரவு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் பெறலாம் எனவும் கூடுதல் செலவீனம் ரூ.**23.00** இலட்சம் **11** உரக்குடில்கள் அமைக்கும் பணியில் ஏற்படும் சேமிப்பு நிதியில் ஈடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி பொறியாளரால் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கையில் அத்தியாவசிய பணியாக அவசரமாக செய்ய வேண்டியுள்ளது. ஆக மொத்தம் **(60.00+23.00) 83.00** இலட்சத்திற்கு மன்ற ஒப்புதல் பெற்று நகராட்சி நிர்வாக ஆணையராக தலைமை

பொறியாளரிடம் Received Technical Sanctionபெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் திருத்திய மதிப்பீட்டின் படி ரூ.83.00 இலட்சத்திற்கு பணி செய்ய அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

மதிப்பீட்டு எண்.515/2018–2019

**தீர்மானம் எண். 241– அங்கீகரிக்கப்பட்டது.**

31. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள வலம்புரிவிளை உரக்கிடங்கில் Bio-Mining முறையில் குப்பைகளை பிரித்து எடுக்கும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் பிரசுரம் செய்த வகைக்கு Ravi Publicity Service Chennai –க்கு ரூ.58,328/– விளம்பர கட்டணம் செலுத்த ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.21962/2015/இ3

**தீர்மானம் எண். 242– அங்கீகரிக்கப்பட்டது.**

32. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 38–ல் இருளப்பபுரம் ஜங்சனில் நிழற்குடை அமைக்கும் பணிக்கு (MP 2016-2017) மதிப்பீடு எண்.266/2016–2017, நாள். 17.02.2017 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திருமதி.E.சாந்தி என்பவர் மதிப்பீட்டை விட 11.00% குறைவாக கொடுத்துள்ளார் மன்ற தீர்மானம் எண்.369, நாள். 31.03.2017–ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூடுதல் வைப்புத்தொகை ரூ.6000/–ம் செலுத்திய பின்னர் 17.04.2017 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் இது நாள் வரை பணி நடைபெறவில்லை. மேற்படி பணியினை ரத்து செய்து செ.மு.எண்.ஆ3/3407/2016, நாள்.11.05.2018–ன் படி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவு வழங்கியதற்கிணங்க திருமதி.E.சாந்தி என்பவர் செலுத்தியுள்ள 1% முன் வைப்புத்தொகை ரூ.3000/–ம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.6000/–ஐ திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.266/2016–2017/இ3

**தீர்மானம் எண். 243– அங்கீகரிக்கப்பட்டது.**

33. இம்மாநகராட்சி அலுவலகத்தில் புதிதாக Cate அமைக்க மதிப்பீடு எண்.265/16–17, நாள். 17.02.2017 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திருமதி.E.சாந்தி (அம்பாள் கன்ட்ஸ்ரக்ஸன்ஸ்) என்பவர் மதிப்பீட்டை விட 10.00% குறைவாக எடுத்துள்ளார் மன்ற தீர்மானம் எண். 342, நாள். 31.03.2017–ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ரூ.4000/–ம் செலுத்திய பின்னர் 25.04.2017 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இடத்தில் இதுநாள் வரை பணி நடைபெறவில்லை. ஒப்பந்தக்காரர் தான் கட்டிய 1% முன் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையினை திரும்ப கேட்டுள்ளார்.

தற்போது பொது நிதியில் பணி மேற்க்கொள்ளாததால் மேற்படி பணியினை ரத்து செய்து ஒப்பந்தக்காரர் திருமதி.E.சாந்தி என்பவர் செலுத்தியுள்ள 1% முன் வைப்புத்தொகை ரூ.2000/–ம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.4000/–ஐ திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.265/2016–2017/இ1
**தீர்மானம் எண். 244– அங்கீகரிக்கப்பட்டது.**

34. இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.48–ல் சரலூர் அம்மன் கோவில் முதல் செந்தூரான் பெயர் பலகை வரை மழைநீர் வடிகால் ஓடை அமைக்க மதிப்பீடு எண்.205/15–16, நாள்.20.10.2015 அன்று E-Tender மூலம் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தக்காரர் திரு.K.மணிகண்டன் என்பவர் மதிப்பீட்டை விட 9.00% குறைவாக எடுத்துள்ளார் மன்ற தீர்மானம் எண்.1310, நாள்.18.12.2015–ன் படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கூடுதல் வைப்புத்தொகை ரூ.14,000/– செலுத்திய பின்னர் 24.01.2017 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.
மேற்படி இடத்தில் இதுநாள் வரை பணி நடைபெறவில்லை ஒப்பந்தக்காரர் தான் கட்டிய 1% முன் வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகையினை திரும்ப கேட்டுள்ளார். தற்போது பணி மேற்கொள்ள மாநகராட்சியில் நிதிநிலைமை சீராக இல்லாததாலும் தற்பொழுது பணி செய்யவில்லை. எனவே மேற்படி பணியினை ரத்து செய்து ஒப்பந்தக்காரர் திரு.K.மணிகண்டன் என்பவர் செலுத்தியுள்ள 1% முன் வைப்புத்தொகை ரூ.7,000/–ம் மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.14,000/–ஐ திரும்ப வழங்கவும் அங்கீகாரத்திற்காக.
**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.205/2015–2016/இ1
**தீர்மானம் எண். 245– அங்கீகரிக்கப்பட்டது.**

35. இம்மாநகராட்சிக்குட்பட்ட வடசேரி பாலமோர் ரோடு, புல எண்.E11/2-2 மற்றும் 2–3 இல் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலையில் வழக்கு W.P(MD) No.12563/2018 இன் படி வழக்கு நடைபெற்று மாநகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து ஆக்கிரமிப்பினை அகற்றகேட்டு ஆக்கிரமிப்பாளருக்கு Formc நோட்டீஸ் சார்பு செய்யப்பட்டது இந்நிலையில் தினகரன் பத்திரிகை செய்தியிலும் Formc நோட்டீஸ் பிரசுரம் செய்யப்பட்டது.

இந்நிலையில் தினகரன் பத்திரிகையில் பிரசுரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.8928, GST ரூ.223.20 மற்றும் SGSTரூ.223.20 ஆக மொத்தம் ரூ.9374/– வழங்க தினகரன் பத்திரிகையில் Bill வழங்கப்பட்ட நிலையில் மன்றத்திற்கு தொகை வழங்க பொருள் கொண்டு வரப்பெற்றதில் ரூ.9374–க்கு பதிலாக ரூ.8928/– என பொருள் கொண்டு வரப்பெற்று மன்ற தீர்மானம் எண்.120, நாள். 28.02.2019–இல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே வித்தியாசத்தொகை ரூ.447/– ஐ தினகரன் பத்திரிகைக்கு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தொகை வழங்கியதாகவும் அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு** – அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.2520/2005/எப்1
**தீர்மானம் எண். 246– அங்கீகரிக்கப்பட்டது.**

**36.** இந்நகராட்சிக்கு சொந்தமான மார்ச் **2019–ல் 9** ஆண்டுகள் முடிவுற இருக்கின்ற கீழ்காணும் கடைகளுக்கு **06/02/2019** அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஏலம் போகாத கடைகளுக்கு தொடர்ச்சியாக மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் **26–06–2019** அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது. பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை கீழ்கண்டவாறு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

| **வ.எண்** | **பெயர் மற்றும் முகவரி** | **பொது ஏல நடவடிக்கை** | **ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை** |
|---|---|---|---|
| **வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலையம் Phase I கடை எண் 12** | | | |
| **01** | திரு. சதீஷ் குமார்<br>த/பெ அருணாசலம்<br>81A வணிகர் தெரு<br>வடசேரி<br>நாகர்கோவில் | பொது ஏலத்தில் யாரும் கலந்தகொள்ளவில்லை | 26,750/- |

மேற்காணும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் வடசேரி கிறிஸ்டோபர் பேருந்து நிலைய Phase Iகடை எண் **12** –க்கு உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ **26750/–** என திரு. சதீஷ் குமார் என்பவர் கேட்டுள்ளார்.

மேற்படிகடை எண் **12**–க்கு முந்தைய குத்தகை உரிமதாரர் மாத வாடகையாக ரூ **30682/–** என எடுத்து நடத்திவந்தார். தற்போதுதிரு. சதீஷ் குமார் என்பவர் ஒப்பந்தப்புள்ளி மூலம் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ **26,750/–** என கேட்டுள்ளார். மேற்படி கடை ஏப்ரல் **2019** முதல் பூட்டிய நிலையில் உள்ளது. அதனால் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுகிறது. மேலும் கடை எண் **12**–க்கு **06–02–2019** அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு. செல்லப்பா என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ **26,500/–** பொது ஏலத்தில் கேட்டிருந்தார். மேற்படி மாத வாடகை தொகை குறைவாக இருந்த காரணத்தால் ஆணையர் அவர்களின் உத்தரவுபடி கடை எண் **12**–க்கு தொடர்ச்சியாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. தற்போது மேற்படி மேற்படி கடைக்கு திரு.சதீஷ் குமார் என்பவர் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ.**26,750/–** என கேட்டுள்ளார். எனவே மேற்படி கடை தொடர்ந்து பூட்டிய நிலையில் உள்ளதாலும், இந்த கடையினை அருகில் உள்ள கடைகள் சராசரியாக இதே மாத வாடகை அடிப்படையில் உள்ளதாலும், நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாமல் இருக்க வேண்டியும் உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ. **26,750/–** என கேட்டுள்ள திரு. சதீஷ் குமார் என்பவருக்கு கடை உரிமம் வழங்குவது சம்மந்தமாக மன்றம் பரிசீலனை செய்து அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.**016726/2018/அ6**
**தீர்மானம் எண். 247– அங்கீகரிக்கப்பட்டது.**

**37.**நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான சரலூர் மாட்டு சந்தை அருகில் உள்ள கடை எண் **03**, வரி விதிப்பு எண் **2018072** திரு. B. சுரேஷ் த/பெ பாலகிருஷ்ணன் என்பவர் மாத வாடகையாக ரூ **6788/–** என உரிமம் எடுத்துள்ளதாகவும், அன்னார் உரிமம் எடுத்த நாள் முதல் பல முறை நேரில் சென்று மாத வாடகை செலுத்த தெரிவித்தும், அறிவிப்பு அனுப்பியும் கடை வாடகை நிலுவை தொகை ரூ.**1,12,100/–** செலுத்தவில்லை என்றும் ஆதலால் கழிந்த **27–05–2019** அன்று வருவாய் உதவியாளர்களுடன் கடை எண் **03–**ஐ பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் அன்னார் செலுத்திய வைப்புத் தொகையினை மாத நிலுவை வாடகையினை ஈடு செய்திட பறிமுதல் செய்து மேற்படி கடையினை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிட நடவடிக்கை மேற்கொள்ளலாம் என வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

எனவேசரலூர் மாட்டு சந்தை அருகில் உள்ள கடை எண் **03**, வரி விதிப்பு எண் **2018072** திரு. B. சுரேஷ் த/பெ பாலகிருஷ்ணன் என்பவர் உரிமத்தினை ரத்து செய்து அன்னாரின் வைப்புத் தொகையினை மாத வாடகையினை ஈடு செய்திட பறிமுதல் செய்திடவும், மேற்படி கடையினை மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்காக ஆகும் விளம்பர செலவினத்திற்கும் மன்ற அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.**7841/2017/அ13**
**தீர்மானம் எண். 248– அங்கீகரிக்கப்பட்டது.**

**38.** இம்மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் வாகனம் எண்.TN74D 2036 –ற்கு (FC) தகுதி சான்று பெற கீழ்கண்ட பழுது வேலைகள் சரிசெய்ய அனுமதிக்கு.

**<u>வேலை விபரம்:-</u>**

1. நான்கு வீல்களுக்கும் பேரிங் பழுதுபட்டதை மாற்றி புதிய கீரீஸ் வைத்து திரும்ப பொருத்துதல்.
2. நான்கு வீல்களுக்கும் பிரேக் லைனர் புதியது மாற்றி பிரேக் சிலிண்டர் எட்டும் புதியது பொருத்துதல்.
3. இரண்டு டோர் லாக்கு வைண்டர் பேடு மாற்றி கிளாஸ் சரி செய்து மாற்றுதல்.
4. இரண்டு டோர் கிஞ்சஸ் ரீகண்டிசன் செய்து மாற்றுதல்
5. டீசல் டாங் கீளீன் செய்து டியூப் மாற்றுதல்
6. பம்பு நாசில் கழற்றி மாட்ட பம்பு நாசில் பழுதுபட்டதை மாற்றி வால்பு செக்கப் செய்தல்

7. வாட்டர் பம்பு புதியது பொருத்தல் வேண்டும்
8. ரேடிட்டர் கிளீன் செய்து புதிய ஹோஸ்கள் அனைத்தும் மாற்றுதல்
9. 3" வால்பு பொருத்தி 3" பைப் ஆல்ரேசன் செய்து 3" ஹோஸ் 15 மீட்டர் புதியது மாற்றுதல்.
10. 2" டால் வால்பு புதியது பொருத்தி 1½"ஹோஸ் 15 மீட்டர் புதியது மாற்றுதல்.
11. எல்லா ஆயில்களும் மாற்றி ஆயில் பில்டர் டீசல் பில்டர் மாற்றுதல்.
12. சைலன்சர் மப்ளர் புதியது பொருத்தி பைப்புகள் மாற்றுதல்
13. பின்பக்க இரண்டு மெக்காடு பழுது நீக்கி நான்கு பக்க பிளாப்பு மாட்டுதல்.
14. செல்ப் மோட்டார், பிரஸ், புஸ், மாற்றி பழுது நீக்கி சர்வீஸ் செய்தல்
15. புதிய ஹான் இரண்டு மாட்டுதல்.
16. எலக்ரிக்கல் செக்கப் செய்து உதிரி பாகம் மாற்றி மாட்டுதல்
17. வாகனம் சர்வீஸ் செய்தல்
18. வாகனம் வர்ணம் பூசி எழுத்துக்கள் எழுதுதல்.

மேற்கண்ட பழுது வேலைகள் சரிசெய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச செலவுத்தொகை ரூ.85000/—க்கு அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**— அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.10428/2017/இ2
**தீர்மானம் எண். 249— அங்கீகரிக்கப்பட்டது.**

**39.** நாகர்கோவில் மாநகராட்சியில் பணியாற்றி **31.08.2011—ல்** ஓய்வுபெற்ற திரு.S.பாலகிருஷ்ணன், வருவாய் உதவியாளர் தொடர்ந்த வழக்கு **22207/2018—ன்** Counter Affidavit தயார் செய்து netting செய்து வழங்கியமைக்கு ரூ.5000/— வழங்க திரு.V.R.சண்முகநாதன் சிறப்பு அரசு வழக்கறிஞர் கேட்டுள்ளார். மேற்படி கட்டணம் ரூ.5000/—க்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.
**அலுவலக குறிப்பு**— அங்கீகரிக்கலாம்
கோப்பு எண்.19114/2011/சி1
**தீர்மானம் எண். 250— அங்கீகரிக்கப்பட்டது.**

**40.**நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண்.07, வரிவிதிப்பு எண்.2018259, மாத வாடகையாக ரூ.21000/— என திரு.ரபீக் என்பவர் உரிமம் எடுத்து நடத்திவந்தார். தொழில் நஷ்டம் காரணத்தாலும், அதனால் வெளிநாடு செல்ல வேண்டியுள்ளதால் மேற்படி கடையினை நடத்த முடியவில்லை என்றும் எனவே 01.07.2019 முதல் கடையினை ஒப்படைப்பு செய்வதாகவும், விண்ணப்பத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் மாநகராட்சி வருவாய் ஆய்வாளர் தனது அறிக்கையில் மேற்படி கடை எண்.07—ஐ உரிமம் எடுத்த திரு.ரபீக் என்பவருக்கு தொழில் நஷ்டம் காரணமாக தொடர்ந்து நடத்த இயலாத நிலையுள்ளதாலும் மாநகராட்சி வசம் ஒப்படைப்பதாகவும் உரிமதாரர் திரு.ரபீக் என்பவரால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மேற்படி கடையின் உரிம காலம் முடிவடையும் முன்னால் கடையினை மாநகராட்சி வசம் ஒப்படைக்கும் நிலையில் 2016—2017—ஆம் ஆண்டு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்ட கடைகள் அனுபவிக்கும்

உரிமத்திற்கான சிறப்பு கட்டுப்பாடுகள் வரிசை எண்.7–ன் படி இம்மாநகராட்சிக்கு எந்த வகையிலும் நிதியிழப்பு ஏற்படாதவாறு மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொண்டு ஒப்படைக்கும் வரையிலான மாத வாடகை தொகை மற்றும் மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையில் நிதியிழப்பு ஏற்பட்டாலும் திரு.ரபீக் என்பவரே பொறுப்பாக்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், தொகை செலுத்தாதபட்சத்தில் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தொகையினை வசூல் செய்யப்படும் என்பதையும் உரிமதாரருக்கு விபரம் தெரிவித்து வைப்புத்தொகையினை நிறுத்தி வைத்தும் மேல்நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

எனவே வருவாய் ஆய்வாளரின் அறிக்கையில் தெரிவித்துள்ளபடி அண்ணா பேருந்து நிலையம் புதிய கடை எண்.07 வரிவிதிப்பு எண்.2018259 திரு.ரபீக் என்பவர் கடைக்கு செலுத்த வேண்டிய மாத வாடகையினை அன்னாரின் வைப்புத்தொகையில் இருந்து ஈடு செய்யவும், மேலும் மேற்படி கடையினை மறு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளும் நிலையில் நிதியிழப்பு ஏற்பட்டாலும் மேற்படி உரிமதாரரே பொறுப்பாக்கி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், தொகை செலுத்தாதபட்சத்தில் நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு தொகையினை வசூல் செய்யப்படும் என்பதையும் உரிமதாரருக்கு விபரம் தெரிவித்தும் மேற்படி கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும் அதற்காகும் விளம்பர செலவினத்திற்கும் மற்றும் இதர செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.14389/2018/அ13

**தீர்மானம் எண். 251– அங்கீகரிக்கப்பட்டது.**

**41.** இந்நகராட்சி பணியாளர்கள் அலுவலக பணிக்காக வெளியூர் சென்று வருவதற்கு வழங்கப்படும் பயணப்படிக்கான தொகைகள் விதிமுறைகளிப்டி அனுமதித்து வழங்க **2019–2020–**ம் நிதி ஆண்டிற்கு உத்தேச செலவு தொகை ரூ.6,00,000/–க்கு அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.4723/2019/பி1

**தீர்மானம் எண். 252– அங்கீகரிக்கப்பட்டது.**

**42.** இந்நகராட்சியில் பணிபுரிந்து **2019–2020–**ம் நிதி ஆண்டில் ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அரசு விதிகளின்படி (நிதி பயன் 15.09.2000 முதல் ) (அ.ஆ.எண்.429 நிதி (ஓய்வூதியம்) நாள். 15.09.2000) சிறப்பு சேமநலநிதி திட்டத்தின் கீழ் நிர்வாக பங்கு தொகை தலா ரூ.10,000/–ம் வீதம் வழங்குவதற்கும் மற்றும் வட்டி தொகை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.13120/2013/பி1

**தீர்மானம் எண். 253– அங்கீகரிக்கப்பட்டது.**

**43.** நாகர்கோவில் மாநகராட்சிக்கு சொந்தமான சரலூர் மீன் சந்தை வளாகத்தில் தேசிய மீன் வளத்துறை திட்டத்தின் கீழ் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கடையும் **16 X11** சதுர அடியில் மொத்தம் **16 (1** முதல் **16)** கடைகளுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், மேலும் ஒவ்வொரு கடைக்கும் வைப்புத்தொகையாக ரூ.**100** இலட்சம் மற்றும் மின் கட்டண வைப்புத்தொகையாக ரூ.**20,000/–** நிர்ணயம் செய்திடவும், மேலும் விளம்பர செலவினத்திற்கும்,வழக்கு செலவினத்திற்கும் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.**00731/2019/**அ**6**

**தீர்மானம் எண். 254– அங்கீகரிக்கப்பட்டது.**

**44.** இம்மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையங்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்பாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்ட இடங்களில் மின்கம்பங்கள் அமைத்து கண்காணிப்பு கேமிரா பொருத்தும் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் பிரசுரம் செய்த வகைக்கு M/s.KAL PUBLICATIONS (P) Ltd., நாகர்கோவில் நிறுவனத்திற்கு ரூ.**9672/–** னை வழங்கிட அங்கீகாரத்திற்காக.

**அலுவலக குறிப்பு**– அங்கீகரிக்கலாம்

கோப்பு எண்.**00731/2019/**அ**6**

**தீர்மானம் எண். 255– அங்கீகரிக்கப்பட்டது.**